ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 5. செப்டம்பர், 1942 நெ. 6.

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம்.எல்.ஏ.

எஸ். சத்தியநாராயண

எடிடர்.

ஸ்ரீமான்

வி. வியன்ன, பி.ஏ., பி.எல்.

16

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.

1. தலையங்கம்.—

ஆரம்பக் கல்வியை பஞ்சாயத்தினிடம் ஒப்படைத்தல் ... 267

2. கிராம அபிவிருத்தி—R. காலெடி, M.A., I.C.S. ... 271

3. இன்புளுயன்ஸா ஜுரம் (Influenza) ... 276

4. அதிக ஆகார பயிர் உற்பத்தி ... ... 277

5. செய்தித் திரட்டு ... ... 281

6. சென்னை மதுவிலக்குச் சட்டத் திருத்தம் ... 282



கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன் பொதுக்கூட்டம்.

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன் பொதுக்கூட்டம் 1942-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, பகல் 12-மணிக்கு மதராஸ் பிரொவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க் கட்டடத்தில், (சென்னை ஹைகோர்ட்டுக்கு எதிரில்) நடக்கும். எல்லா மெம்பர்களும் வருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

விஷயங்கள்.

1. 31-10-42-ல் முடியும் 4½ ஆண்டில் யூனியன் வேலையைப் பற்றிக் காரியதரிசிகளின் அறிக்கை.

2. சர்க்காரின் புதிய பஞ்சாயத்து மசோதாவைப்பற்றி யோசித்தல்.

3. அமைப்புத்திட்டத் திருத்தப் பிரேரணைகள். (அடுத்த பக்கத்தில் காண்க.)

4. உத்தியோகஸ்தர்கள் தேர்தல்.

(a) நிர்வாக சபை.

(b) தலைவர், உபதலைவர், பொதுக்காரியதரிசி, உதவிக்காரியதரிசிகள்.

5. பொதுக்காரியதரிசி பிரஸ்தாபிக்கும் இதர விஷயங்களும், மெம்பர்கள் முன் அறிவிப்புடன் கொண்டுவரும் பிரேரணைகளும்.

OF THE REGISTRAR OF ... MADRAS

குறிப்பு:—(i) இக்கான்பரன்சுக்குப் பிரதிநிதிகளை அனுப்புவதில் ஏற்படும் செலவுகளைச் சர்க்கார் அனுமதிக்கவில்லை; எனினும் இதைப் பொருட்படுத்தாமல் சகல அங்கத்தினரும் கூட்டத்தில் ஆஜரா யிருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்; எப்படியாவது செலவைச் சரிக்கட்டிக்கொள்ளலாம். எல்லாப் பஞ்சாயத்துகளும் பிரதிநிதிகளை அனுப்பி யூனியனைப் பலப்படுத்துவது நிரம்பவும் அவசியம்.

(ii) இந்தக்கூட்டமானது மாகாண கோவாபரேடிவ் யூனியன் பொதுக்கூட்டத்தின்போது நடக்கிறது. சாதாரணமாக கோவாபரேடிவ் பிரதிநிதிகள் பஞ்சாயத்து அங்கத்தினர்களாக இருப்பார்கள். ஆகையால், பஞ்சாயத்துகள் ஷை மகாநாட்டுக்கு ஒரே பிரதிநிதியை தேர்ந்தெடுத்தால் செலவு மிச்சப்படும்.

# அமைப்புத்திட்டத் திருத்தம்.

திரு. வி. விய்யன்ன ப்ரபோஸல்

---

## உபவிதி (பை-லா) 16.

தலைவர், உபதலைவர், காரியதரிசிகள், இன்னும் மற்ற நிர்வாக சபை அங்கத்தினரை உபவிதி (பை-லா) 18 (4) படி தேர்ந்தெடுக்க வேண்டியது.

### திருத்தம்.

18 (4) உபவிதிப்படி "மற்ற மெம்பர்களை நிர்வாக சபைக்கு" என்ற வார்த்தைகளை எடுத்துவிட.

## உபவிதி (பை-லா) 18 (4)

ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள பஞ்சாயத்து மெம்பர்களிலிருந்து மூன்று மெம்பர்களை நிர்வாக சபைக்கு தேர்ந்து எடுத்துக் கொள்ளப்படும்.

### திருத்தம்.

இவ்வார்த்தைகளைச் சேர்க்க.

'தபால் மூலம் தேர்தல் நடத்துவதைப் பற்றி நிர்வாக சபை அனுசரணையாக நிர்ணயிக்கும் ரூல்களின்படி தபால் மூலம் ஓட் செய்வதால்.'

## உபவிதி (பை-லா) 22.

நிர்வாக சபைக் கூட்டங்களுக்குக் கோரம் (quorum) 12.

### திருத்தம்.

நிர்வாக சபைக் கூட்டங்களுக்குக் கோரம் 10.

## உபவிதி (பை-லா) 30.

தங்களுக்கு அவசியமும் உசிதமுமாகத் தோன்றினால் எந்த அதிகாரத்தையும் தலைவருக்காவது ஒரு காரியக் கமிட்டிக்காவது, நிர்வாகக் கமிட்டி விட்டுவிடலாம்.

### திருத்தம்.

காரியக் கமிட்டி என்னும் பதங்களுக்குப் பின்னால் "அல்லது பொதுக் காரியதரிசிக்கு" என்று சேர்க்க.

---

The Village Panchayat Journal.

VOL. V] SEPTEMBER, 1942. [No. 6.

*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

## The Elementary Education—Panchayats

"This Conference is of opinion that the existence of various schools managed by different bodies in a village is prejudicial to the efficient conduct of Elementary Education besides involving unnecessary expenditure and avoidable duplication and therefore requests the Government to adopt necessary measures to amalgamate all the schools now existing in a single village and entrust Elementary Education to the village Panchayats."

"This Conference is of opinion that as under the scheme of village Panchayats embodied in resolution 1, 2, 3 above all important functions like the management of Elementary schools, village sanitation including water supply, village roads, rural medical relief etc., will be looked after by the village Panchayats and that main roads, secondary schools and large enterprises like railway alone will be left out. The execution and management of these may be placed in the hands of the concerned departments of the Government."

The above one resolutions passed by about 3600 Panchayats at a Conference held in 1938 at Madras.

The Village School has a very interesting name in two of the South Indian Languages. The village school is essentially the meeting place for the village. It is true there are other places of assemblage for the village. There is the village temple to which the villager, en mass, repairs for his spiritual needs. Evidently the School was meant to serve as his meeting place for cultural purposes. As a matter of fact it is to-day, even more than in the past, such a centre for the village. Propagandists from all the development departments of the Government must needs use the school for their work. This aspect becomes more especially true when the school, is a Village Panchayat School and the Village Panchayat runs, in addition, a library of its own. Under modern conditions a school or, a village without a library of its own is unthinkable as progressive. The education of the adult, which means in the main the extension of the child's education into its adult life, has necessarily to be associated with the local village school in our rural areas in the

form of a library added, a reading room opened, a study circle organised, an exhibition arranged, a lecture delivered and the like. It will thus be seen that the school really becomes the life-giving centre for the villager, along with his children from this generation into the next and into more and more generations to come. The villager has, and must be made to feel he has, paramount interest in this village institution—the school. It is unthinkable therefore that this fundamentally important institution of the village should be taken out of the management of the villager. It would be most undemocratic that the Panchayat should be deprived of the power of managing its school and that the villager should be spoon-fed for his intellectual needs by people who are not of himself. The eagerness with which Panchayats took up the village school programme and carried it out has been on record for long. We have often quoted the opinion of one of the first Registrar General's which runs as follows. "Nearly all Panchayats which have opened schools under the scheme have evinced keen interest in their development and many have taken a pride in providing accommodation and amenities on a generous scale" and he also felt that along the lines of Panchayat schools scheme lies the correct solution of the twin problem of proper authority for managing elementary schools in villages and of the equitable distribution of the financial burden of elementary education. This statement of the position is still supported by a careful study of the statistics and other material in the latest report of the Director of Public Instruction. The most important amenity for a school is its own building. According to the Report for 1940-41, there were in the Province 1,455 Panchayat schools. Of these 1090 had their own building. The percentage works out to 78. Take the District Board institutions. Out of 13,250 institutions only 3,501 which is but a 26 per cent. have buildings of their own. We know of very many instances of Panchayats taking interest in Health-week celebrations conducted by the District Board schools. We can give very many cases where Panchayats contributed to the ex-Taluk and District Board for constructing school-buildings—either in labour or half and half cash. It is evident that if Panchayats are allowed to manage their schools the question of finding accommodation—one of the main questions in Elementary education—would be practically automatically solved. In regard to libraries attached to schools the report does not separately give figures for the Panchayats including them under District Boards. But we are in a position to state that, Panchayats have shown, under galling restrictions placed on them, a commendable enterprise in providing for libraries and reading rooms. Even in the earliest stages of the Panchayat movement it earned appreciation from Mr. T. G. Rutherford the then Registrar General of Panchayats for its enthusiasm for the Library endeavor. We refer to his speeches as he went round on a tour of inspection of Panchayats in the northern circars. The Panchayat schools have practically eliminated untrained teachers. Out of 2,033 teachers employed as many as 235 were secondary grade teachers, 1,608 Higher Elementary trained, 97 lower and 93 others. The strength and attendance, as per the report, do not appear to be unsatisfactory. On the other hand the Panchayats have received recognition in one very important matter. The report says. "It is gratifying to note that scheduled caste pupils continued to be admitted freely and their number has risen to 9,166 as against 8,879 in

the previous year." It must be remembered, in this connection that the Panchayats are working under very great handicaps. The teachers are ill-paid as compared with teachers in the District Board service. The disbursement of pay to the teachers is delayed beyond measure. The Panchayat Board is, at every turn, required to submit to delays on account of the intricate control by the Inspector of Local Boards. Again unlike District Boards, Panchayat have no finance worth the name. Their resources are very limited. In spite of such restrictions Panchayats have managed to show zeal in their educational institutions.

It is well to note one particular aspect of this question at this stage. The question of management of a village school under local Boards is a question as between the Inspector of Local Boards and the Panchayat. It is not a question as between the Panchayat Board and the Educational Department. We have always conceded, and we are sure every Panchayat knows the advantage of it, that the technical control of schools by educational experts is in the larger interests of education. The degree of control exercised by the departments over the Panchayat school in matters technical is not any the less than the control exercised by them over the District Board Schools. If the intervention of the Inspector of Local Boards as an additional controlling authority over Panchayats affects in any manner healthy exercise of supervisory power matters may be adjusted by the Government. Probably it would be to the advantage of the Panchayats and their schools if a uniform method under one control is accepted by the Government for all elementary schools alike. Then probably the Panchayat would be saved from the very awkward situations that now arise by a number of agencies being connected with their educational activities.

Yet another point in favour of a Panchayat school should not be forgotten. The Champion scheme was in favour of a single management for school work in one village because it would save duplication of expenditure on many items. Different buildings for differently managed schools, sets of teachers for such schools multiplied by the number of managements and expenditure on extra equipment required were all expected to be eliminated in time. That could only be achieved if the Panchayats were allowed freedom to manage their institutions and enthused to draw the educational endeavour of the village to a common centre. Therefore, it is our earnest prayer that before the Governments gives final form to the Panchayat Bill on the anvoil they will consider all these matters and render justice to the Panchayats. If they should be worth anything as local units for public weal, they must have control of the nerve centre of their own locality—the school round which must rotate the cultural development of their masters, the people at large.

In Sir Statham, we have now an able administrator giving in intensive drive for the betterment of Elementary education. In his annual administration reports, nothing has been stated to condemn Panchayat administration of Elementary schools. In fact he can look to the Panchayats to more effectively carry out his schemes than the District Boards. Though no doubt state control is the best, next best to it is Panchayat control. This can admit of no doubt. The villager, who is vitally interested in the education

of his boy will be better able to supervise the imparting of education. As such we hope Sir Statham will join with Mr. T. G. Rutherford to evolve a scheme where by the Panchayat will be entrusted with the elementary education subject to control and supervision by the Educational Department. Let the ideal of Democracy be first given effect to now and in this simple instance.

We suggest a scheme on the following lines for consideration by the Government.

1. A District Committee to be in charge of transfers and promotions of teachers consisting of the District Educational officer, 3 representatives of Panchayats, the District Panchayat officer and the President District Board.

2. The District Educational officer to be in charge of supervision and control on the Technical or Education side—Education Budget of Panchayats should pass through him.

3. The Panchayat to administer Elementary Education, finding the necessary funds, buildings, appointment of teachers (of course from the qualified list of candidates approved by the D. P. O., granting of leave etc., and punishments of teachers—subject to appeal in certain cases to the District Committee.

4. All Elementary Education in the village to be in one agency—the Panchayat for economy and prevention of unhealthy rivalry.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

| Vol. 5 | செப்டம்பர், 1942. | No. 6 |
|---|---|---|

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப் தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

---

## தலையங்கம்.

### ஆரம்பக் கல்வியை பஞ்சாயத்தினிடம் ஒப்படைத்தல்.

"பற்பல ஸ்தாபனங்களால் நடத்தப்படும் பல பள்ளிக்கூடங்களால் கிராமத்தின் ஆரம்பக் கல்விக்கு இடைஞ்சலே ஏற்படுவதால், கவர்மெண்டார் தற்போது ஏற்பட்டிருக்கும் எல்லா பள்ளிக்கூடங்களையும் ஒன்றாகச் சேர்த்து அவைகளை பஞ்சாயத்துகள் வசம் ஒப்புவிக்கும்படி கவர்மெண்டாரை கேட்டுக்கொள்ளுகிறது."

"தீர்மானங்களில் நிறைவேற்றப்பட்ட கிராம பஞ்சாயத்து திட்டப்படி, ஆரம்பக் கல்வி பள்ளிக்கூடங்களை நடத்துவது, கிராம சுகாதாரம், ஜல சப்ளை, கிராம ரஸ்தாக்கள், வைத்திய வசதி இவை போன்ற முக்கியமான வேலைகளை கிராம பஞ்சாயத்து கவனித்துக்கொள்ளும். பெரிய சாலைகள், மத்தியதரப் பள்ளிக்கூடங்கள், இன்னும் மிக பெரிய வேலைகள், ரயில் வண்டிகள் முதலியன, இவைகளை கவர்மெண்டார் தங்கள் இலாகாக்கள் மூலம் கவனித்துக் கொள்ளலாம்."

ஷை தீர்மானங்கள் 1938 இல் சென்னையில் கூடின. 3600 பஞ்சாயத்துகள் மகா நாட்டில் நிறைவேற்றப்பட்டன.

இரண்டு தென்னிந்திய பாஷைகளில் கிராம பள்ளிக்கு ருசிகரமான பெயர் உண்டு. அதுதான் கிராமத்தார் கூடும் பொது ஸ்தலம். இன்னும் இதர இடங்களும் உண்டு. உதாரணமாக, கிராம கோவில், அவ்விடத்தில் பக்தியின் பொருட்டு கூடுவதுண்டு. ஞான வளர்ச்சிக்காக கிராமப் பள்ளிக்கூடம் கூடுமிடமாக ஏற்பட்டிருக்கலாம். இது தற்போது மிகவும் உண்மை. கவர்மெண்டு அபிவிருத்தி இலாகா பிரசாரகர்கள் தங்கள் வேலைகளுக்கு இதை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இது விசேஷ

மாக கிராமப் பள்ளிக்கூடம் பஞ்சாயத்தினால் நடத்தப்பட்டு, அந்தப் பஞ்சாயத்து ஒரு புத்தகசாலையை நடத்தினால், ஏற்படுகிறது. நவீன முறைப்படி புத்தகசாலை இல்லாத கிராமமோ, பள்ளிக்கூடமோ முன்னேற்ற முள்ளதாக கருதப்படமாட்டாது. ஆண் பிள்ளைகள் பள்ளிக்கூடங்கள் 35,326 இல் 16,483 க்கு புத்தகசாலைகள் இருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது. 4,360 பெண் பள்ளிக்கூடங்களில் 2,420 க்கு புத்தகசாலைகள் உண்டு. வயது வந்தவர்களின் கல்வி கிராம புரங்களில், ஒரு புத்தகசாலை, வாசகசாலை, ஒன்றுகூடி விவாதித்து கற்றுக்கொள்ளுவது, காக்ஷிசாலை, உபன்யாசம், இவைகளின் உதவியால் நடைபெறவேண்டும்.

கிராமவாசிக்கு, தன் தலைமுறைக்கும், பின் தலைமுறைகளுக்கும், கிராமப் பள்ளியானது ஜீவ நாடியாக அமைந்துள்ளது. கிராம பள்ளியில் கிராமவாசிக்கு இருக்கவேண்டிய ஊக்கத்தை அவன் மனதில் பதிய வைக்க வேண்டும்.

இப்படிப்பட்ட மிகவும் முக்கியமான ஸ்தாபனத்தை கிராம வாசியின் பராமரிப்பிலிருந்து எடுத்து விடுவது அனுசிதம். அது ஜனநாயகத்திற்கு ஏற்றதல்ல. கிராம கல்வி திட்டத்தை பஞ்சாயத்து மிக்க ஆவலுடன் வரவேற்று நடத்தியது. முதல் முதல் ரிஜிஸ்திரார் ஜெனரல் சொன்னதாவது—

"திட்டத்தின்படி பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திய அநேகமாக எல்லா பஞ்சாயத்துகளும் அவைகளின் விருத்தியில் அதிக ஊக்கம் காட்டி, மிகவும் தாராளமாக இடவசதியும், மற்ற சௌகர்யங்களையும் செய்துக்கொடுப்பதில் முன் வந்தன." அவர் மேலும், பஞ்சாயத்து பள்ளிக்கூட திட்டத்தினால் தான், ஆரம்பக் கல்வி மேல்பார்வை விஷயமும், செலவை ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பும் தீரும் என்று அபிப்பிராயப்பட்டார். கல்வி இலாகா டைரக்டர் சமீப யாதாஸ்தில் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களை கவனித்தால் இந்த உண்மை புலப்படும். பள்ளிக்கூடத்திற்கு மிகவும் முக்கியமாக வேண்டியது கட்டடம். 1940-41 யாதாஸ்துப்படி இந்த மாகாணத்தில் 1,455 பஞ்சாயத்து பள்ளிக்கூடங்கள் இருந்தன.

அதில் 1,090 க்கு சொந்த கட்டடங்கள் உண்டு. அதாவது 100க்கு 78 விகிதம். ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்கள் 13,250 இல் 3,501 க்கு தான், அதாவது 26 சத விகிதம் சொந்த கட்டடங்கள் உண்டு. ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களால் நடத்தப்படும் சுகாதார வாரங்களில் அநேக பஞ்சாயத்துகள் பங்கெடுத்துக் கொள்ளுகின்றன. அநேக இடங்களில் முன்னிருந்த தாலுகா போர்டு, ஜில்லா போர்டு பள்ளிக்கூட கட்டடங்களுக்கு பஞ்சாயத்துகள் ஆள் சகாயமும், பாதி திரவிய சகாயமும் செய்திருக்கின்றன. பள்ளிக்கூடம் நடத்துவதை பஞ்சாயத்துகளிடம் ஒப்படைத்தால், ஆரம்ப கல்வியின் பெரிய சிரமமான, கட்டட தொல்லை தானாக தீர்ந்துவிடும்.

பள்ளிக்கூடங்களுடன் சேர்ந்து வைக்கப்பட்டிருக்கும் புத்தகசாலைகளைக் குறித்து யாதாஸ்தில் தனியாக காணப்படவில்லை. அவை ஜில்லா

போர்டுகளுடன் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சொல்ல முடியாத இடைஞ்சல்களுக்கிடையே பஞ்சாயத்துகள் புத்தகசாலைகளும், வாசக சாலைகளும் ஏற்படுத்துவதில் அபார திறமை காண்பித்திருக்கின்றன என் பதை நாம் திடமாகச் சொல்லுவோம்.

பஞ்சாயத்துகளின் புத்தகசாலை உத்சாகத்தைக் குறித்து அந்த காலங்களிலேயே அப்போது ரிஜிஸ்திரார்-ஜெனரலாயிருந்த ரூதர் போர்டு துரையவர்கள் சிலாகித்து சொல்லியிருக்கிறார். வட சர்க்காரில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்த காலங்களில் அவர் பேசியதை நாம் குறிப்பிடு கிறோம். தேர்ச்சியடையாத உபாத்தியாயர்களே பஞ்சாயத்து பள்ளிக் கூடங்கள் ஏற்பட்ட பின் கிடையாது. மொத்தம் 2,033 உபாத்தியாயர் களில் 235 மத்தியதர பயிர்ச்சி பெற்றவர்களும், 1,608 ஹையர் எலிமெண் டரி பயிற்சி பெற்றவர்களும், 97 கீழ் எலிமெண்டரியும், 93 பேர் இதரர் களும் ஆவர். யதாஸ்துபடி பள்ளிக்கூடங்களின் மாணுக்கர் எண்ணிக் கையும், வகுப்புகளுக்கு போவதும் அதிருப்திகரமானதாக இல்லை. இன்னும் ஒரு முக்கிய விஷயத்தில் பஞ்சாயத்துகள் பாராட்டப்பட வேண் டியவை. "தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் தாராளமாக சேர்க்கப்பட் டார்கள். அவர்கள் எண்ணிக்கை சென்ற வருஷம் இருந்த 8,879 இ லிருந்து 9,166 ஆக அதிகரித்திருப்பதானது போற்றத்தக்கது. இது விஷயமாக, பஞ்சாயத்துகள் அதிக இடைஞ்சல்களுக்கிடையே வேலை செய்ய வேண்டியிருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஜில்லா போர்டு உபாத்தியாயர்கள் போலல்லாமல், இங்கு உபாத்தியாயர்கள் சம்பளம் மிகக்குறைவு. அவர்கள் சம்பளம் அதிக தாமதித்து தான் கொடுக்கப்படுகிறது. ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டர் ஆதிக்கத்திற்குள் இருப்பதால் பஞ்சாயத்து போர்டுகளுக்கு அதிக கால தாமசம் ஏற்படுகின்றது. மேலும் ஜில்லா போர்டு போலல்லாமல் பஞ் சாயத்துகளுக்கு ஐவேஜு ஸ்வல்பம். இப்படி யிருந்தும், பள்ளிக்கூடங் கள் நடத்தும் விஷயத்தில் பஞ்சாயத்து போர்டுகள் அதிக ஊக்கம் காட்டி யிருக்கின்றன.

இது விஷயமாக இந்த சந்தர்பத்தில் ஒன்றை கவனிக்க வேண்டும். ஸ்தல ஸ்தாபனத்தின் கீழ் கிராம பள்ளிக்கூடம் நடத்துவது ஸ்தல ஸ்தா பன இன்ஸ்பெக்டரையும், பஞ்சாயத்தையும் பொறுத்த விஷயம். அது ஷை பஞ்சாயத்து போர்டுக்கும் கல்வி இலாகாவிற்கும் சம்பந்தமான விஷயமல்ல. கல்வியை கல்வி இலாகா நிபுணர்கள் மேற்பார்வையில் விடுவதுதான் உசிதம் என்பது எங்கள் அபிப்பிராயம். அவர்கள் ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களை கல்வி சம்பந்தமான விஷயங்களில் எப்படி மேற் பார்வை செய்கிறார்களோ, அதே அளவுக்குதான் பஞ்சாயத்து பள்ளிக் கூடங்கள் விஷயத்திலும் கவனிக்கிறார்கள்.

ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டர் பஞ்சாயத்துக்கள் விஷயமாக செலுத்தும் மேல் பார்வையால், ஏதாவது இடைஞ்சல் ஏற்படும் என்றி

ருந்தால், கவர்மெண்டார் எல்லா ஆரம்ப பள்ளிக்கூடங்கள் மேல் பார்வை விஷயமாக ஒரே முறையை ஒரு கண்காணிப்பின் கீழ் ஏற்படுத்துவது நலம். அப்போது பஞ்சாயத்துகளுக்கு கல்வி விஷயமாக பல அதிகாரிகள் செலுத்தும் அதிகாரத்தால் அநேக சந்தர்பங்களில் ஏற்படும் சங்கடமான நிலைமை ஏற்படாது.

பஞ்சாயத்து பள்ளிக்கூடங்கள் விஷயமாக மற்றொன்றையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு கிராமத்தில் பள்ளிக்கூடத்தை ஒரு நிர்வாகத்தின் கீழ்தான் வைக்கவேண்டும் என்று சாம்பியன் துரை அபிப்பிராயப்பட்டார். அதனுல் அநேக இரட்டிப்பு செலவு குறையும் என்ற காரணத்தால். வெவ்வேறு பள்ளிக்கூடங்களுக்கு தனித்தனி கட்டடங்கள், தனித்தனி உபாத்தியாயர்கள், இன்னும் இதர அதிகப்படியான செலவுகள் எல்லாம் நாளடைவில் குறைந்து போகும். அது எல்லாம், பஞ்சாயத்துகளிடம் கல்வியை ஒப்படைத்தால் சாத்தியப்படும்.

ஆகையால் இப்போது ஆலோசிக்கப்படும் பஞ்சாயத்து மசோதா விஷயமாக முடிவான தீர்மானம் செய்யுமுன் கவர்மெண்டார் இந்த விஷயங்களை யெல்லாம் ஆலோசித்து, பஞ்சாயத்துகளுக்கு நியாயம் வழங்குமாறு பிரார்த்திக்கிறோம். கிராம ஜனங்களின் நன்மைக்கு சரிவர பாடுபட்டு உழைக்கவேண்டுமாயின், கிராமத்தின் ஜீவநாடிப் போன்ற பள்ளிக்கூடத்தின் நிர்வாகத்தை பஞ்சாயத்துகளிடமே ஒப்படைக்க வேண்டும்.

தற்போது டைரக்டராக இருக்கும் ஸ்டாதம் துரையவர்கள் கல்வி விஷயங்களில் மிகவும் சமர்த்தர். ஆரம்பக்கல்வியை பரவச்செய்வதில் ஆர்வம் கொண்டவர். அவர் தன்னுடைய வருஷாந்திர அறிக்கைகளில் பஞ்சாயத்து நிர்வாகங்களைக் கண்டித்து ஒன்றும் எழுதவில்லை. அன்றியும் ஜில்லா போர்டுகளைக்காட்டிலும் பஞ்சாயத்துகளே அவருடைய திட்டங்களை சரிவர நடத்தும். அரசாங்க நிர்வாகம் எல்லாவற்றையும் விட மேலானது தான். ஆனல் அதற்கு அடுத்தபடி பஞ்சாயத்து நிர்வாகம்தான் ஏற்றது. இதைப்பற்றி ஐயமில்லை. தன்பிள்ளைகள் கல்வி விஷயத்தில் அக்கரை கொண்ட கிராம வாசி அப்போது அதிகமாக கவனிக்கமுடியும். முன் காலங்களில் குழந்தைகள் நடத்தும் தசரா விழாக்கள் கிராம ஜனங்களுக்கு உத்சாகம் அளிப்பதுண்டு.

ஆகையால் ரூதர்போர்டு துரையைப்போல் ஸ்டாதமும் ஆரம்பக் கல்வியை, உசிதமான கல்வி இலாகா மேற்பார்வைக்கு வேண்டிய கட்டுப்பாடுகளுடன், பஞ்சாயத்துகளிடமே ஒப்படைக்கும்படியான ஒரு திட்டம் தயார்செய்து, இந்த சிறிய விஷயத்தில் ஜனநாயகக்கொள்கையை அமுல் நடத்தி காட்டுவார் என நம்புகிறோம்.

அடியில் கண்ட திட்டத்தை கவர்மெண்டு ஆலோசனைக்குத் தெரிவிக்கிறோம்.

1. ஜில்லா கல்வி உத்தியோகஸ்தர், 3 பஞ்சாயத்து பிரதிநிதிகள், ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர், ஜில்லா போர்டு பிரசிடெண்டு, இவர்கள்

கொண்ட ஒரு ஜில்லா கமிடி நியமித்து, ஆசிரியர்களின் மாற்றுதல், உத்தியோக உயர்வு, இவைகளை இந்த கமிடியிடம் ஒப்படைக்கவேண்டும்.

2. கல்வி சம்பந்தமான விஷயங்கள், பஞ்சாயத்துகள் கல்விக்காக செலவழிக்கும் பணம், இவைகள் ஜில்லா கல்வி உத்தியோகஸ்தர் மேல் பார்வையில் நடக்கவேண்டியது.

3. ஆரம்ப கல்வி பள்ளிக்கூடங்களை நடத்துவது, அவைகளுக்கான செலவு, கட்டடம், ஆசிரியர்கள் நியமனம், (தேர்ச்சிபெற்றவர்கள்தான் நியமிக்கப்படவேண்டும்), அவர்கள் லீவு, தண்டனை முதலிய விஷயங்கள், இவை ஜில்லா கமிடியின் அபபீலுக்கு உட்பட்டு இருக்கவேண்டியது. இவைகள் யெல்லாம் பஞ்சாயத்து அதிகாரத்திற்குள் அடங்கவேண்டியது.

4. எல்லா ஆரம்ப கல்வி விஷயமும் ஒரு அதிகாரத்தின் கீழ் வரவேண்டும் அ. து. பஞ்சாயத்து.

---

# கிராம அபிவிருத்தி.

(தொடர்ச்சி.)

---

(R. காலேடி, M.A., I.C.S.)

## III.—கால்நடைகள்.

மைசூரிலும்; ஒங்கோலிலும் உயர்ந்த ஜாதி கால்நடைகள் இருந்தும்கூட (அவைகளைப்பற்றி விவசாய இலாகா விவரங்களை தெரிவித்திருக்கிறது) பொதுவாக ஐரோப்பாவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தென்னிந்திய கால்நடைகளின் நிலமை மிக்க மோசமானது. ஆனால் ஐரோப்பாவில் இது விஷயமாக சென்ற இரண்டு நூற்றாண்டுகளாகத்தான் நிலமை சீரடைந்தது. அந்த முறைகளையே மைசூர், மற்ற இடங்களில்போல் இந்த தேசத்திலும் கையாளலாம். நல்ல கன்று போடுவதும், ஆகாரமும்தான் முக்கியம். குடிகளுக்கு மென்டிலியன் (Mendelian) முறையைப்பற்றி புரியும்படியும் அது எப்படி கால்நடைகளை விருத்தி செய்ய அனுசரிக்க வேண்டும் என்பதையும் சொல்ல வேண்டும். தரகர்களிடம் வாங்குவதைவிட கால்நடைகளை தானே விருத்தி செய்வது அனுகூலம் என்பதை எடுத்துக் காட்டவேண்டும். ஒவ்வொரு ஜாதியின் குண விசேஷங்களைப்பற்றியும், அவைகள் உழைக்கவும், பால் கொடுக்கவும் எப்படி பிரயோஜனப்படுகின்றன என்பதைப்பற்றியும் தெரிவிக்க வேண்டும். உயர்ந்த கால்நடைகளுக்கு நல்ல தீனி வேண்டும். தீனிக்காக உண்டான பயிர்களைப்பற்றியும் அவைகளை பயிர் செய்ய வேண்டிய அவசியத்தைப்பற்றியும் சொல்ல வேண்டும். (சில தீனி பயிர்கள் தான்ய பயிர்களுடன் மாறி மாறி பயிர் செய்வதால், பூமியின் செழிப்புத் தன்மை மேன்மை யடையும் என்பதை மறக்கக்கூடாது.) அவைகளின் சாணி சேகரித்து வைத்து எப்படி உபயோகிப்பது என்பதை விளக்க வேண்டும். கால்நடைகளின் நோய்களைப்பற்றியும், அவைகளை தடுக்கும் விதத்தையும், குணப்படுத்தும் வழிகளையும் எடுத்துரைக்க வேண்டும். கொஞ்சமான மேய்ப்பு நிலத்தை அண்டி அதிக கால்நடைகள் பலமற்று விருத்தியாவதை தடுக்க, காளைகளுக்கு விரைகளை எடுப்

பதின் அனுகூலத்தைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். வண்டி இழுக்கும மாடுகளுக்கு அதிக ஆயுளையும் நல்ல தேக பலத்தையும் கொடுக்க வண்டிகளையும் வண்டி பாதைகளையும் சீர்படுத்தும்படி சொல்ல வேண்டும்.

### IV.—கிராம தொழில்கள்.

குடியானவன் தன் ஒழிந்த நேரங்களில் லாபகரமான எதாவது மற்றொரு தொழிலை நடத்தினால், அவனது நிலைமை மிகவும் மேன்மைப்படும் என்பது தெரிகிறது. திருவாங்கூரில் பக்ஷி வளர்ப்பது, தேனீ வளர்ப்பது, இவைகளால் அதிக அனுகூலத்தை அடைந்திருக்கிறார்கள். நிலத்தின் வருமானத்தின் மூலமே ஜீவனம் நடத்த கஷ்டப்பட்டவர்கள், நெசவு, கூடை போடுதல் முதலிய தொழில்களைச் செய்து நன்மை அடைந்திருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட தொழில்களைச் செய்ய கொஞ்சம் அறிவும், பயிர்ச்சியும் தேவை. அப்போதுதான் அவை லாபகரமாக இருக்கும். இவைகளை போதிக்க கிராமத்தார்கள் போதிய ஊதியம் கொடுத்தால் அதற்குத் தகுதியானவர்கள் போதிக்க கிடைப்பார்கள்.

### C.—நடை முறையில் கூட்டுறவு.

கிராமத்தார்கள் தாங்கள் என்ன செய்யக்கூடும் என்பதை தெரிந்துகொண்டதும் அவர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு தாங்களே பாடுபட வேண்டும். பணம், வேலையாட்கள், யோசனைகள், இவைகளெல்லாம் கிடைக்க, அவர்கள் ஒன்றுகூடி சேரவேண்டும். கவர்மெண்டையும் இதரர்களையும் ஆலோசனைகளுக்கும் சிறு சகாயத்திற்கும் எதிர் பார்க்கலாமேயொழிய மற்றபடி கூடாது. அப்படி செய்வதும் சாத்தியமல்ல. தங்கள் கைகளைக்கொண்டும், கருவிகளைக்கொண்டும், பிராணிகளைக்கொண்டும் தான் உழைக்கத் தயாராக இருக்கவேண்டும். எதாவது முன்பணம் தேவையாயிருந்தால், தங்கள் கண்யம், சுறுசுறுப்பு, யோக்கியத்தன்மை, இவைகளைக்கொண்டு பெறவேண்டும். கக்ஷி சண்டை, ஆபாசமான வாழ்க்கை, வியாதி இவை கூடவே கூடாது. சுத்தமாகவும், ஐக்கியமாகவும், பாடுபட்டு உழைத்தால் எல்லோருக்கும் பயனளிக்கும். பொது நன்மைக்கு ஒவ்வொருவரும் தன்னாலானதைச் செய்ய வேண்டும்.

### சங்கங்கள்.

கிராம ஜனங்கள் பாடுபட்டு உழைக்கவும், நேர்மையாகவும் ஒன்றுகூடி இருக்க தயாரானபின், கவர்மெண்டு உத்தியோகஸ்தர்களும், மற்றவர்களும், அவர்களுக்குத் தேவையான ஸ்தாபனங்களை ஏற்பாடு செய்ய சகாயம் செய்யவேண்டும். இந்த விஷயத்தில் கோவாபரேடிவ் இலாகாவும், ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தரும் முக்கியமாக கவனிக்க வேண்டியவர்கள். அவசரப்பட்டு சங்கங்கள் ஸ்தாபிக்கக்கூடாது. யோக்கியமாகவும், நன்னடத்தை யுள்ளவர்களும், சுறுசுறுப்புள்ளவர்களும் தான் மெம்பர்களாக உரிமை இருக்கும்படி செய்ய வேண்டும். கடன் வாங்குவதை தடுத்து, மிச்சப்படுத்தும்படி தூண்ட வேண்டும். வீண் செலவுகளை கட்டுப்படுத்தி லாபம் தரக்கூடிய காரியங்களுக்குத்தான் கடன் கொடுக்கப்படவேண்டும்.

சங்கங்கள் தங்கள் சொந்த ஜவேஜை வைத்துக்கொண்டே வேலை செய்ய வேண்டுமேயொழிய, வெளி சகாயத்தை அதிகம் எதிர்பார்க்கக்கூடாது. கட்டுப்பாடுகள் தீவிரமாக இருக்க வேண்டியதாயினும், தகுந்த ஸ்வாதீனம் இருக்கும்படி

ஏற்பாடு செய்ய வேண்டும். சங்கங்களுக்கு தங்கள் விவகாரங்களை தாங்களே கவனித்துக்கொள்ள சுதந்திரம் கொடுக்க வேண்டியதாயினும், கவர்மெண்டு உத்தியோகஸ்தர்கள் உசிதமான ஆலோசனைகளைச் சொல்லி, பிழைகளை உடனே திருத்திவிட வேண்டும்.

## I.—கிராம பஞ்சாயத்துகள்.

கிராம பஞ்சாயத்தானது ஒரு கூட்டுறவு ஸ்தாபனம் என்பதாக பொதுவாக நினைக்கப்படுவதில்லை. ஆயினும், சரியாகப் பார்க்கப்போனால் அது ஒரு கூட்டுறவு ஸ்தாபனமே; அது பஞ்சாயத்து சட்டப்படி ஏற்பட்டிருந்தாலும் சரி, கிராமவாசிகளாகவே ஏற்படுத்தி யிருந்தாலும் சரி. பஞ்சாயத்து சட்டப்படி ஏற்படும் ஸ்தாபனத்தின் முக்கிய அனுகூலமென்னவென்றால், நில செஸ்ஸில் ஒரு பாகம் அதற்கு கிடைக்கும். பெரிய கிராமங்களில் இந்தத் தொகை அதிகமானதாக இருக்கும். சிறிய கிராமத்தில் கிடைக்கும் கொஞ்சம் தொகைகூட எவ்வளவோ உபயோகமாக இருக்கும். கிராமவாசி வரி விதிப்பதை விரும்புவதில்லை யாதலால், சட்டத்தின் கீழ் பஞ்சாயத்து ஏற்படுவதை அவன் விரும்புவதில்லை. ஆனால் ஒரு பஞ்சாயத்தானது தனக்குக் கிடைக்கும் நில தீர்வையின் பாகத்தையும், இன்னும் ஜனங்களாகவே இஷ்டப்பட்டு கொடுக்கும் சிறிய தொகையையும் வைத்துக்கொண்டு சரியானபடி வேலை துவக்கி நடத்துமானால், அதனால் ஏற்படும் நன்மைகளைக்கண்டு கிராமவாசிக்கு தானும் கொஞ்சம் வீட்டு வரியோ வேறு இதர வரியோ செலுத்தினால் தனக்கு எவ்வளவு அனுகூலங்கள் கிடைக்கும் என்பதை உணர்வான். இந்த மாதிரி நிலமை ஏற்பட முழு கிராமத்தின் கூட்டுறவைப்பெற பஞ்சாயத்து எப்போதும் பாடுபட வேண்டும். அது தன் வேலைகளை பகிரங்கமாக நடத்த வேண்டும். முக்கியமான யோசனைகளை எல்லா கிராமத்தாருக்கும் தெரியப்படுத்தி, கலந்து ஓட்டு எடுத்து அதன்படி நடக்க வேண்டும். பஞ்சாயத்தானது தனது உண்மையான பிரதிநிதி என்பது கிராமவாசியின் மனதில் பதிந்து விட்டால், அதனுடைய முடிவுகளை தன் சொந்த முடிவாகவே அவன் பாவிப்பான். அது பிரத்தியக்ஷமான பலன்களைக் கொடுத்தால், அதற்காக சிறு தொகை செலுத்துவது நல்லதுதான் என்று எண்ணுவான். ஒரு கிராம சீர்திருத்தக் கமிடியும் ஏற்பட்டு இதே மாதிரி பொதுவாக முழு கிராமத்தின் நன்மைக்குப் பாடுபட்டு—கக்ஷிகளுக்கு மாத்திரமல்ல—உழைக்க வேண்டும். பஞ்சாயத்து பகிரங்கமாக கூடுவதோடில்லாமல், அடிக்கடி கூடி, தன் வேலைகளை அசிரத்தை செய்யாமல் கவனிக்க வேண்டும். தான் செய்ய வேண்டிய வேலைகளைக் குறித்து, முக்கியத்துவகிரமமாக ஒரு திட்டம் தயார் செய்துக்கொள்ள வேண்டும். பொதுவாக ஜல சப்ளை முதலில் கவனிக்கப்பட வேண்டும். பிறகு சுகாதாரம் (கக்கூசு, சாக்கடை இவைபோன்றவை), அதன் பிறகு கிராம ரஸ்தாக்கள், பிறகு கல்வி (கிராம புத்தகசாலையை மறக்கக்கூடாது). கிராம தோப்புகள் நடுதல், குடி மராமத்து மேற்பார்வை, இவைகளும் உபயோககரமானவைகள்தான்.

## II.—கிராம சங்கங்கள்.

ஒரு பஞ்சாயத்தாவது, கமிடியாவது கிராம நிர்வாகம் செய்யலாம். ஆனால் பொது ஜனங்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்ற கிராமத்திற்கு ஒரு ஸ்தாபனம் தேவை. எல்லா கிராமத்தார்களும் ஒன்றுகூடி தங்கள் விருப்பங்களைக் குறித்து விவாதிக்கும் ஒரு சங்கம் பஞ்சாயத்திற்கு ஆலோசனைகூறி, கவர்மெண்டு உத்தியோகஸ்தர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளலாம். முறையாக, கிராமத்தில் அதிக சுத்தத்திற்கும், நல்ல கல்விக்கும் இன்னும் அநேக சௌகர்யங்களுக்கும் அது பாடுபடலாம். கோவாபரேடிவ் சங்கங்கள் ஏற்படவும், பின் அவைகளின் வேலையை கவனிக்கவும் உதவலாம். பொதுஜன அபிப்பிராயத்தை தெரிந்து எடுத்துச் சொல்லலாம். கவர்மெண்டுக்கு குடிகளுடன் உத்தியோகஸ்தர்களுக்கு தொடர்பு ஏற்படுத்தியும், ஜனங்களின் அபிப்பிராயத்தை அதிகாரிகளுக்குத் தெரிவித்தும், ஒத்துழைக்கலாம். பக்ஷபாத மற்றிருந்தால், தேர்தல் அபேக்ஷகர்கள் எல்லாரையும் அபிப்பிராயங்களைத் தெரிவித்துக்கொள்ளும்படி செய்யலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கிராமத்தார்களின்

தேவைகளை எடுத்துச் சொல்லலாம். ஒரு தாலூகா பூராவும் இவ்விதம் ஒவ்வோரிடத்திலிருந்தும் வேலை செய்தால், எவ்வளவோ பலன் தரும். கிடைக்கும் அனுகூலங்களைக் கவனிக்குமிடத்து இதனால் ஏற்படும் செலவு மிகவும் ஸ்வற்பம் தான். முக்கியமானது என்னவென்றால், பெரிய நிலச்சொந்தக்காரர்களும், செல்வாக்குள்ளவர்களும் இது விஷயமாக முன் நிற்க வேண்டும்.

## III.—கூட்டுறவு கடன் சங்கங்கள்.

கூட்டுறவு கடன் சங்கம் சரிவர வேலை செய்ய வேண்டுமானால் கடன் கொடுக்கும் விஷயத்தில் தாராளத்தன்மையில்லாமல் (அது எல்லாருக்கும் சகஜமான சுபாவமாயிருந்த போதிலும்) சரியான கட்டுப்பாடுகளின் பேரில் கொடுபட வேண்டும். ஒரு கிராம சங்கமானது பெரியதாயும் திறமையற்றிருப்பதைக் காட்டிலும், சிறியதாகவும் சுறு சுறுப்பாக வேலை செய்வது மேன்மையானது. அங்கத்தினர்கள் சிக்கனமாகவும், ஜாக்கிரதையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். கடன் வாங்க வேண்டிய நிமித்தம், வாங்குபவரின் திருப்பிக் கொடுக்கும் சக்தி இவைகளை நன்றாக பரிசீலனை செய்யவேண்டும். கடன்கள் தகுதியான தேவைகளுக்கு கொடுத்து அவைகள் அதற்கே உபயோகப்படும்படி கவனிக்கவேண்டும். கொடுக்கல் வாங்கல் எல்லாம் எவ்வளவு கொஞ்சமாக சாத்தியமோ, அவ்வளவு கொஞ்சமாக இருக்க வேண்டும். கடன் சிறிய காலத்திற்குள் திருப்பிக்கொடுபட வேண்டியவைகளாகவும், வாங்குபவரின் மாமூல் வருமான அளவை அனுசரித்தே இருக்கவேண்டும். அநேக கடன் விவசாய தேவைகளுக்காகவும், 1 வருஷம், 6 மாத தவணை பேரிலோ கொடுக்கவேண்டும். அங்கத்தினர்கள் பொதுக்கூட்டத்திற்கு வரவேண்டும். அப்படி சிரத்தை எடுத்துக்கொள்ளாத அங்கத்தினர்களை சங்கத்திலிருந்து விலக்கிவிடவேண்டும்.

## IV.—கூட்டுறவு சேவிங்ஸ் பாங்கு.

ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்திற்கும் ஒரு சேவிங்ஸ் பாங்கு அவசியம். அங்கத்தினர்களை தங்களால் கூடுமானதையெல்லாம்—எவ்வளவு சிறியதாயிருந்தாலும்—அதில் போடும்படி தூண்ட வேண்டும். சிட் பண்டு இந்த தேசத்தில் வியாபித்திருக்கிறது. சிறிய தொகைகளை அப்போதைக்கப்போது கட்டிக்கொண்டே வந்தால், கடைசியில் பெரிய முதலாகிறது.

அந்த முறையையே கடன் திருப்பிக்கொடுக்கவும் அனுசரிக்கவேண்டும் இந்தப்படி சேர்த்துவைக்கும் நிதியை ஏற்படுத்தும் கூட்டுறவு சங்கத்தின் உதவி கொண்டு அங்கத்தினர்கள் தங்கள் பழைய கடன்களைத் திருப்பிக் கொடுத்தும் பிறகு தங்கள் தேவைகளுக்கு சங்கத்திலிருந்து சரசமாக கடன் வாங்கலாம்.

## V.—விவசாய அபிவிருத்தி சங்கங்கள்.

விவசாய முன்னேற்றதிற்கு தனித்தனியாக செய்யும் முயற்சிகளைக் காட்டிலும் ஐக்கியத்துடன் செய்யும் முயற்சியால் அதிக பலன் அடையலாம். உதாரணமாக, புதிய முறைகளையும், புது ரக விதைகளை உபயோகித்தும் பரிசுஷித்துப் பார்க்கலாம். செலவும், லாபநஷ்டங்களும் எல்லோரும் பங்கிட்டுக் கொள்ளுவதால் முயற்சி பலன் கொடுக்காவிட்டாலும், ஒருவருக்கும் அதிக நஷ்டம் ஏற்படாது. முயற்சி பலித்தால், எல்லாருக்கும் லாபம். நல்ல அனுபவமும் கூட. இந்த சங்கங்கள் நிலங்களை குத்தகைக்கோ, கிரயத்திற்கோ, இரவலாகவோ வாங்கி அதில் ஆராய்ச்சி பண்ணைகளை ஏற்படுத்தி, அநேக வருஷங்கள் ஒரு விவசாய நிபுணரின் மேற்பார்வையில் பயிர் செய்து வரலாம். நல்ல சுத்தமான விதைகளையும், புது முறை கருவிகளையும் தருவித்து, குறைந்த விலைக்கு அவைகளை அங்கத்தினர்களுக்கு விநியோகிக்கலாம். பொலி எருதுகள், காளைகள் இவைகளை வளர்த்து, கால் நடைகளின் சரியான போஷாப்பும் வளர்க்கும் விதத்தையும் விருத்தி செய்யலாம், தோப்பு நடுதல் ஆரம்பித்து, ஊர் முழுதும் செடிகளை நடும்படி ஜனங்களை தூண்டலாம். கவர்மெண்டுக்குச் சொந்தமில்லாத நிலங்களில் விளையும் மரம் செடிகளை பத்திரப்படுத்தி, எல்லாரையும் சில பாகங்களை வரிசை கிரமமாக சில வருஷங்கள் உபயோகப்படுத்தாதிருக்கும்படி ஏற்பாடு செய்யலாம்.

## VI.—கூட்டுறவு கடன் விற்பனை சங்கங்கள்.

கடன் கொடுக்கவும், உற்பத்திக்கும் மாத்திரம் கூட்டுறவு சங்கங்கள் இருந்தால் போதாது. மார்கெட்டிங்கிற்கும் கூட்டுறவு ஸ்தாபனம் ஏற்படவேண்டும். நடுவில் தரகர்கள் லாபம் அடையவேண்டியிருப்பதால், சாமான்களை உற்பத்தி செய்பவனுக்கு கடைசியில் விற்பனைதுகையில் ஒரு சிறிய பாகமே சேருகிறது. விற்பனை ஸ்தாபனம் ஏற்பட்டு, உற்பத்தி செய்பவனிடமிருக்கும் சாமான்களை நேராகவோ மொத்தமாகவோ, சில்லரையாகவோ,'பெரிய பட்டணங்களில் விற்க ஏற்பாடு செய்வதில் அதன் அங்கத்தினர்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. மத்திய விற்பனை ஸ்தாபனங்களை கவர்மெண்டார் இப்போது ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதன் உதவிகொண்டு கிராம சங்கங்கள் தங்கள் சரக்கை நல்ல விலைக்கு விற்கமுடியும். சாமான் விற்பனையாகாமல் இருந்தால், சங்கம் இந்த ஜாமினின்பேரில் தகுந்த துகையை குடிகளுக்கு கொடுக்கும். ஆகையால் பணம் கிடைக்க வேண்டி குடியானவன் தன் சரக்கை அவசரப்பட்டு விற்கவேண்டிய அவசியமில்லை.

## VII.—கிராம தொழில் சங்கங்கள்.

கிராமத்தில் எந்தத்தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றாலும், அது பக்ஷி வளர்த்தல், தேனீ வளர்த்தல், நெசவு, கூடைபோடுதல், அல்லது மற்ற எந்தத் தொழிலாயிருந்தாலும் சரி, தேர்ச்சிபெற்றவர்மூலம் போதிப்பது அவசியம். தேர்ச்சி பெற்றபோதகரை வெளியிலிருந்தாவது தருவிக்கவேண்டும், அல்லது கிராமத்திலிருக்கும் ஒருவருக்கு தேர்ச்சி யளிக்கும்படி செய்ய வேண்டும். இதற்காக ஏற்படும் செலவை ஒரு பெரிய கிராமத்திலிருக்கும் எல்லா ஜனங்களும் சேர்ந்தாவது, அல்லது அக்கம் பக்கத்து பல கிராமங்கள் ஒன்று சேர்ந்தாவது ஏதாவது ஒரு சிறிய கட்டணம் விதித்து தேவையான துகையை சேகரிக்க வேண்டும். (இதே மாதிரி பல கிராமங்கள் சேர்ந்து ஒரு விவசாய நிபுணர், அல்லது கால்நடை வைத்தியர் முதலியவர்களை நியமித்துக் கொண்டால் நன்மை தரும்.)

## VIII.—சீர்திருந்த வாழ்க்கை சங்கங்கள்.

வழக்கத்தால் ஏற்பட்ட ஆரோக்கியகுறைவான முறைகள், அதிக செலவுள்ள வாழ்க்கை, கெடுதல் தரும்படியான செய்கைகள், இவைகளை மீறி ஒரு தனி மனிதன் வாழ்வது கஷ்டம்தான். ஆனால் பஞ்சாப், மற்ற இடங்களில் நடந்தது போல், அநேகம் பேர்கள் தங்கள் வாழ்க்கையை சீர்திருத்த நிச்சயம் செய்து கொண்டு ஒன்று சேர்ந்து முயற்சி செய்தால், அவர்களுடைய ஐக்கிய முயற்சியால் பொதுஜன தடைகளையும், அபிப்பிராயங்களையும் மாற்றமுடியும்.

இந்த மாதிரி அவர்கள் தங்கள் வருமானத்திற்குத்தக்கபடி கல்யாணம், மற்ற விசேஷங்களின் செலவுகளை குறைத்துக்கொண்டிருக்கிறார்கள். கல்யாண வயதை அதிகப் படுத்தியிருக்கிறார்கள். பிச்சைகாரர்களுக்கு புத்தியற்றும் ஒரு வியவஸ்தையில்லாமலும் தானம் கொடுப்பதை தடுத்திருக்கிறார்கள். இன்னும் அநேக சீர்திருத்தங்களைச்செய்திருக்கிறார்கள். டாம்பீகமான செலவை குறைத்தால், கடன் வாங்க அவசியமிருக்கிறதில்லை. கல்யாண வயதை குறைப்பதால், ஜனன விகிதம் குறைந்து, கிராமத்து ஜனத்தொகையை அதன் காப்பாற்றும் சக்திக்குமேல் போகாமல் தடுக்கிறது. திடகாத்திர பிச்சைகாரர்களுக்கு பிச்சைபோடாமலிருப்பதால், அந்த பணம் மிச்சமாகி இன்னும் நல்ல காரியத்திற்கு உபயோகமாகிறது. இந்த சங்கத்தின் அங்கத்தினர்கள் தங்கள் வீடுகளையும் சுற்றுப் புறங்களையும் சுத்தமாகவைத்துக் கொள்ள கற்றுக்கொள்ளுகிறார்கள். தங்கள் குழந்தைகளுக்கு வீட்டிலும், பள்ளியிலும் சரியான கல்வி கற்றுக் கொடுக்கிறார்கள். தன் கையே தனக்கு உதவி என்பதை அறிந்து அதன்படி நடந்து தங்கள் சுயமரியாதையை காப்பாற்றிக் கொள்ளுகிறார்கள்.

# இன்புளூயன்ஸா ஜுரம் (Influenza).

சுமார் 25 வருஷங்களுக்கு முன் இன்புளூயன்ஸா ஜுரம் உலகம் முழுவதும் மும்மரமாக பரவியது. அப்போது நம் தேசத்தில் 60 லக்ஷம் ஜனங்கள் அதற்கிரையானார்கள். அதற்குப்பின் இந்த வியாதி ஜனங்களை சில சமயம் மும்மரமாகவும், சில சமயம் லேசாகவும் பீடித்து வந்தது. இதற்கு காரணம் இன்னும் சரியாக கண்டுபிடிக்கப்படவில்லை. அதைத் தடுக்க தேகத்தில் ஊசி குத்திக்கொள்ளப்பட்டது. அதனால் வியாதி தடுக்கப்படும் என்று நம்பப்பட்டது. இந்த வியாதி வந்தால், அதிக ஜுரம், ஸ்வாசப்பை, வயிறு வீக்கம், அவயவங்களின் வலி, அதிக தலைவலி, சோர்வு இவை காணப்படுகின்றன. திடீரென்று குளிரும், தேகமெல்லாம் வலியும், கணகணப்பும், தும்மலும், இருமலும் வந்தால், இந்த ஜுரம் வந்து விட்டது என தீர்மானிக்கலாம். ஆனால் அநேகம்பேர்கள் கடும் ஜலதோஷம் கண்டாலே, இன்புளூயன்ஸா ஜுரம் வந்துவிட்டதாக நினைக்கிறார்கள். இந்த ஜுரம் தனிப்பட்டவர்களுக்கு அதிகமாக வராது. எல்லா ஜனங்களையும் பீடிக்கும். அது அதி சீக்கிரம் பரவும். இப்போது கொஞ்சம் ஜுரம் கண்டால் போவிருந்து அடுத்த மணி அபாயமான நிலமை ஏற்பட்டுவிடும். ஆகையால் ஜாக்கிரதையுடன் இருப்பது அவசியம்.

உடனே டாக்டரை கூப்பிடு.

டாக்டர் வரும்வரை —

1. உடனே படுத்துக்கொள்.
2. குளிராமல் நல்ல கம்பளிகளைக்கொண்டு போர்த்திக்கொள்.
3. படுத்திருக்குமிடத்து ஜன்னல்களை எல்லாம் திறந்துவை
4. அந்த அறையில் வேறு எவரையும் இருக்கவிடாதே.
5. தும்மும்பொழுதும் இருமும்பொழுதும் முகத்துக்கு நேராக கைக்குட்டையை பிடித்துக்கொள். அப்படி செய்தால் பிறருக்கு அந்த நோய் பரவாமலிருக்கும். கைக்குட்டைகளை தண்ணீரில் கொதிக்கவை.
6. உன்னை வந்து யாரும் பார்பதற்கு சம்மதிக்காதே.
7. பால் கஞ்சிபோன்ற லேசான ஆகாரங்களையே சாப்பிடு.

## வீட்டுக்காரர்கள் செய்யவேண்டியவை :—

1. நோயாளி படுத்திருக்கும் அறைக்கு போகாதே. நோயாளியை கவனிக்க வேண்டுமானால் மூக்கையும் வாயையும் துணியால் மூடிக்கொள்.

2. சிக்காளியின் சாமான்களை நன்றாய் தண்ணீரில் கொதிக்க வைக்காமல் தொடாதே.

3. உன் வீட்டிற்கு வேறுயாரும் வரக்கூடாது. நீயும் வேறு வீட்டிற்கு போகக்கூடாது.

4. ஜனக்கூட்டமாயிருக்கும் இடங்களுக்கு போகக்கூடாது. நாடகங்களுக்கு போவது அபாயகரமானது.

5. குழந்தைகளுக்கு நல்ல சட்டைகள் போட்டு குளிர் காற்றுப் படாமல் வைத்துக்கொள்.

6. எல்லா ஜன்னல்களையும் எப்பொழுதும் திறந்துவை.

7. போதுமான அளவு தூங்கு. களைத்துபோகும்படி வேலை செய்யாதே.

8. ஜீரணமாகக்கூடியதாயும், புஷ்டியாயுமுள்ள ஆகாரத்தை சாப்பிடு. சரியானபடி மலஜலம் கழியும்படி பார்த்துக்கொள்.

9. யாராவது தும்மினாலும், இருமினாலும், உடம்பு அசௌகரியமாயிருந்தாலும், எவ்வளவு லேசாயிருந்தாலும் சரி, உடனே அவரை படுக்கவைத்து டாக்டரை கூப்பிடு.

10. ஜுரம் கண்ட சமாசாரத்தை உடனே கிராம முன்சீபுக்காவது சுகாதார உத்தியோகஸ்தருக்காவது தெரியப்படுத்து.

ஆங்கில வைத்தியர்களோ, ஆஸ்பத்திரியோ இருந்தால், அவர்கள் தகுந்த சிகித்சை செய்வார்கள். அப்படி இல்லாத பக்ஷத்தில் அடியில் சொன்னபடி செய்யலாம். அட்டதோடா இலையின் சாறு இரண்டு ஸ்பூனாவது, அல்லது லவங்கப்பட்டை 2 பாகமும், ஒரு பாகம் மிளகு, வால் மிளகு, கடுகு, இஞ்சி இவைகளை காயவைத்து, பொடி செய்து, வஸ்திரகாயம் செய்து, மேல் சொன்ன அட்டதோடா இலையின் கஷாயத்தில் ஒரு சிடிக்கை கலந்து ஒரு அவுன்ஸ் சாப்பிடவும்.

---

# அதிக ஆகார பயிர் உற்பத்தி.

---

தனக்குத் தேவையான அரிசி சென்னை மாகாணத்தில் உற்பத்தியாவதில்லை, பர்மா, சியாம், இந்தோ-சைனா நாடுகளிலிருந்து அரிசி இங்கு வந்துகொண்டிருந்தது. சண்டை காரணமாக அவை நின்றுவிடவே, சென்னை அந்தக் குறைவை ஈடு செய்ய வேண்டியிருக்கிறது. சண்டை காலத்திற்கும், பின்னிட்டும் அரிசி விஷயத்தில் இந்த மாகாணம் தன் தேவைகளை தானே பூர்த்தி செய்துகொள்ளும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். இது விஷயமாக குறைவை ஈடு செய்ய வேண்டிய வழிகளைப்பற்றி கவர்மெண்டு சிந்தித்து, உடனே ஆகாரப் பயிர்கள் உற்பத்தியை அதிகமாக்க வேண்டியதைப்பற்றி தற்போது கவனித்து வருகிறது. இதற்காக பலவிதமான சலுகைகளை அது பயிர் செய்பவர்களுக்கு கொடுத்திருக்கிறது. காய்கறிகள் பயிர் செய்யும் படிக்கும், கைகுத்தல் அரிசியை உபயோகிக்கும்படிக்கும் கவர்மெண்டு தூண்டி யிருக்கிறது.

இது விஷயமாக கவர்மெண்டார் அநேக உத்தரவுகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளைக் குறித்து நாம் இந்த இதழ்களில் எழுதியிருக்கிறோம். உற்பத்தியாகும் பயிரை மிக சிக்கனமாகவும், வீண் செய்யாமலும் உபயோகித்தால்தான் பலனுண்டு.

## முதல் பாகம்.

### ஆகார பயிர்கள், காய்கறிகள், இவைகள் பயிர் செய்ய சலுகைகள்.

### பொது சலுகைகள்.

தஞ்சாவூர், திருச்சி ஜில்லாக்களில் காவேரி, மேட்டூர் நீர்பாசனத்திற்குள்ளடங்கின நிலங்கள் நீங்கலாக, சில நிலங்கள் தீர்வை யன்னியில் நெல் முதலிய ஆகார பயிர்கள் செய்ய கொஞ்ச காலம் கொடுக்கப்படும்.

தண்ணீர் பாய்ச்சக்கூடிய நிலங்கள், 5 வருஷம், 1352, 1353, 1354 பசலிகளுக்கு புஞ்சை தீர்வை யில்லாமல், தண்ணீர் செஸ் மாத்திரம் கட்டும்படி கொடுக்கப்படுகின்றன. தண்ணீர் வசதி யில்லாத நிலங்கள், 1354 பசலி முடியும் வரையில் தீர்வை யன்னியில் கொடுக்கப்படுகின்றன. 1352, 1353, 1354 பசலிகளுக்கு தீர்வை விதிக்கப்பட்டுள்ள காலி நிலம் அந்த பசலிகளில் ஆகார பயிர் உற்பத்தி செய்ய, (ஒரே சதுரமாக இல்லாதிருக்க வேண்டும்,) கொடுக்கப்படுகின்றன. (தற்போதிருக்கும் விதிகளின்படி ஷை நஞ்சை புஞ்சை பயிர்களுக்கு கவர்மெண்டு ஜலாதாரத்திலிருந்து தண்ணீர் எடுக்கவேண்டி யிருந்தால், அதற்கு முன்னதாக கவர்மெண்டு உத்தரவு பெற்று, அதற்குண்டான கட்டணத்தை கட்ட வேண்டும்.

## காவேரி மேட்டூர் பிரதேசங்களில் தனி சலுகைகள்.

மேற்படி பிரதேசங்களில் ஒரே சதுரமாக இருக்கும் நிலங்கள் கொடுபடமாட்டாது என்ற விதி கிடையாது. தாழ்ந்த வகுப்பினருக்கு அந்த நிலங்களில் 5 சதவிகிதம் ஒதுக்கினது போக, பாக்கி நிலங்கள் 1352, 1353, 1354 பசலிகளுக்கு புஞ்சை தீர்வை யன்னியில் தண்ணீர் செஸ் மாத்திரம் கொடுக்கும்படி, ஏலத்தில் விற்கப்படும். ஒரே சதுரமான நிலங்களும் கொஞ்ச காலத்திற்கு அப்படி கொடுக்கப்படும்.

## தண்ணீர் செஸ் சலுகைகள்.

சண்டை காலம் வரையில் ஒரு ஏகராவுக்கு 5 ரூபாய் என்ற முதல் போக பயிர் தண்ணீர் தீர்வை விதிக்கப்படும். காவேரி, மேட்டூர் பிரதேசங்களில் தற்போது ஒரு போக நஞ்சை நிலங்களுக்கு இரண்டாவது போகத்திற்கு முதல் போக தீர்வையில் ஒரு ஏகருக்கு (5 ரூபாயிக்குக் குறையாமல்) பாதி விதிக்கப்படுகிறது. இந்த குறைந்த அளவை சண்டை காலம் வரையில், பட்டுக்கோட்டை, நாகப்பட்டணம், திருத்துறைப்பூண்டி, சீகாழி, மாயவரம், அரந்தாங்கி தாலூக்காக்களிலும், மன்னார்குடி, நன்னிலம் தாலூக்காக்களில் சில இடங்களிலும், எடுத்து விட்டார்கள்.

## நீர்பாசன விதிகளை மீறியதற்காக விதிக்கப்படும் அபராதங்கள் நிறுத்தப்பட்டன.

சண்டை காலம் வரையில் ஷை அபராதங்கள் முன்னதாக கவர்மெண்டு உத்தரவு பெறவில்லை என்ற காரணத்திற்காக விதிக்கப்படமாட்டாது. ஆனால் அப்படி தண்ணீர் எடுப்பதால் ஏற்கனவே யிருக்கும் நீர் வசதிகளுக்கு குந்தகம் ஏற்படக்கூடாது. ஆனால் ஜல சப்ளையைப்பற்றி கவர்மெண்டார் உத்தரவாதம் கொடுக்க முடியாது. மேலும், நீர்பாசன அதிகாரிப்பு தடுக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களிலும், ஆக்ஷேபகரமான முறைகளில் நீர்பாசனத்தை உபயோகிப்பதும் செய்தால், இந்தச் சலுகைகள் கிடையாது.

## காவேரி, மேட்டூர் பிரதேசங்களில் நீர்பாசனத்தை முன்னதாகவே அனுமதித்தல்.

தஞ்சாவூர் ஜில்லாவில் காவேரி, மேட்டூர் பிரதேசங்களில் தற்போது ஒரு போக நெல் பயிர் நிலங்களை இரண்டு போக நெல் பயிர் செய்யவும், முடியுமானால் ஜனவரி மாதத்தில் மூன்றாவது போகம் செய்யவும், மூன்று வாரம் முன்னதாகவே ஜல சப்ளை அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

## ரயில்வே நிலங்கள் பயிர் செய்தல்.

1352 முதல், மூன்று பசலிகளுக்கு நியாயமான கட்டணத்தின் பேரில், ஆகார பயிர்கள் உற்பத்தி செய்ய, மதராஸ் தென் மராட்டா ரயில்வே, வஞ்சான,

நாகபுரி ரயில்வே, தென்னிந்திய ரயில்வேயின் A, B வகுப்பு நிலங்கள் கொடுக்கப்படும். குத்தகைக்கு ரெவினியூ அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

## ஏரிகரை நிலங்கள் பயிர் செய்தல்.

சில சலுகைகள் பேரில் எல்லா சமயங்களும், காய்கறி, புஞ்சை பயிர் செய்ய ஏரிகரை நிலங்கள் சார்ஜு இல்லாமல் கொடுக்கப்படும்.

## புழக்கடை பயிர் செய்தல்.

1353 பசலி முடியும் வரை எவ்வளவு வேண்டுமானாலும், ஆகார பயிர்களும், காய்கறிகளும் புழக்கடைகளில் பயிர் செய்யலாம்.

## கவர்மெண்டு பங்களாக்கள், ஆபீசுகள் காம்பௌண்டில் பயிர் செய்தல்.

கவர்மெண்டு உத்தியோகஸ்தர்கள் மேற் சொன்ன நிலங்களில் ஆகார பயிர்களும், காய்கறிகளும் பயிர் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் தேவையானால் ஆலோசனை சொல்லுவார்கள்.

கவர்மெண்டு ஆபீசுகள் காம்பௌண்டிலும் ஆகார பயிர்கள் உற்பத்தி செய்ய உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது. விதை முதலியவைகளை, விவசாய இலாகா கவனித்துக்கொள்ளும்.

## தீர்வையன்னியில் கொடுக்கப்பட்டிருக்கும் நிலங்களில் பயிர் செய்தல்.

மாதா கோவில்கள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், அனாதை விடுதிகள், தேகாரோக்கிய விடுதிகள், முதலியவைகளை சுற்றியுள்ள காலி நிலங்களில், ஜலத் தீர்வை மாத்திரம் விதிக்கப்பட்டு, ஆகாரப் பயிர்களுக்குத் தீர்வையில்லாமல் கலெக்டர்கள் கொடுக்கலாம்.

## எக்சல் பயிர்.

கிருஷ்ணா, கோதாவரி டெல்டா வடிகால்களில் இருக்கும் நிலங்களை கலெக்டர் யுக்தாசாரம் கொடுக்கலாம்.

கிருஷ்ணா, கோதாவரி டெல்டாக்களில் இன்குளூஷன் கட்டணம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

1353 பசலியிலேயே நீர் பாசனம் செய்யப்பட்டால், கட்டணம் இல்லாமல் ஆயக்கத்துக்குள்ளடங்கி ஆனால் ஜல பாசனம் அடையாமலிருக்கும் நிலங்களை ஆயக்கத்துக்குள் சேர்க்க உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது.

கிருஷ்ணா ஜில்லா, பந்தர் தாலூகாவில் மேலும் 1500 ஏகராக்களுக்கு நீர் பாய்ச்ச திட்டம் நெல் பயிர் செய்ய, அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

எல்லா இடங்களிலும் வாய்க்கால்கள் கவர்மெண்டு செலவிலேயே ஆழமாக்கப்படும்.

ரயத்வாரி, ஜமீன்தாரி பிரதேசங்களில் பயிர் செய்யப்படாமல் இருக்கும் சுமார் 60 லக்ஷம் ஏகரா நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர குடிகளுக்கு முன் பணம் கொடுக்க 20 லக்ஷ ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. 1351 பசலியில் தரம்பாகி இருந்து, முன் பணம் கொடுக்காவிட்டால் 1352 பசலியிலும் சாகுபடி செய்ய முடியாத நிலங்களுக்கு நஞ்சை ஏகரா ஒன்றுக்கு ரூபாய் 10-ம், புஞ்சைக்கு ரூபாய் 5-ம், கடனாக கொடுக்கப்படும்.

விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் 25 ரூபாய் வரையில் விதை எருவு வாங்க கடன் கொடுக்கலாம். தஞ்சாவூர் ஜில்லா தரம்பு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர 22,500 ரூபாய் பிரத்யேகமாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

54,000 ரூபாய்க்கு கடலைப் புண்ணாக்கு சரசமாக விற்கும் போது வாங்கி பின்னிட்டு பயிர் காலங்களில் குடிகளுக்கு கொடுக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

காவேரி, கோதாவரி, டெல்டாக்களில் 6 லக்ஷம் ஏகராக்களுக்கு சிறந்த விதைகள் கொடுக்க இரண்டு திட்டங்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. அதே போல் செங்கற்பட்டு, கிருஷ்ணா ஜில்லாக்களில் 4½ லக்ஷம் ஏகராக்களுக்கு கொடுக்க ஏற்பாடாகி இருக்கிறது.

## காய்கறிகள் பயிர்செய்ய சலுகைகள்.

ஆனைமலையிலும், நீலகிரியில் இங்கிலீஷ் காய்கறிகள் பயிர்செய்யவும் பிரத்தியேக சலுகைகள் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. நீலகிரி ஜில்லாவிலும், மதனபள்ளி, பங்கனூர், முதலிய தாலூக்காக்களிலும் இங்கிலீஷ் காய்கறி விதைகள் இனாமாக கொடுக்கப்படுகின்றன.

## போக்குவரத்து.

வடபக்கிங்காம் கால்வாய் ஆழமாக்கப்பட்டிருக்கிறது. படகாராவிலிருந்து கொச்சிக்குபோக மேற்குக்கரை கால்வாய்கள் சீர்திருத்தப் படுகின்றன.

## இரண்டாம் பாகம்.

தீட்டின அரிசிக்குப் பதில் கைகுத்தல் அரிசி, மட்டாக தீட்டப்பட்ட அரிசி, தான்யங்கள் உபயோகிப்பது பற்றி கவர்மெண்டு அறிக்கை.

புது டெல்லியில் 6-4-42 கூடின மகாநாட்டில் மேற்சொன்ன பிரகாரம் ஜனங்களை வற்புறுத்தும்படி மாகாண கவர்மெண்டுகளுக்கு சிபார்சு செய்யப்பட்டது. அதனால் நெல் பஞ்சம் குறைவுபடுவது தவிர புஷ்டியான ஆகார சத்து உட்கொள்ள சௌகரியம் ஏற்படும் என்று எடுத்துக் காட்டப்பட்டது. பர்மா, தாய்லாந்து, இந்தோ சைனாவிலிருந்து அதிகமாக நெல்தருவிக்கும் இந்த மாகாணத்தில் தான் நெல் அதிகமாக மிஷினில் தீட்டி உபயோகிக்கபடுகிறது. அது கைகுத்தல் அரிசியைக்காட்டிலும் சத்து குறைந்தது. தீட்டும் போது நஷ்டமாகும் வெளி தவிட்டில் தான் முக்கியமான B, என்ற ஊக்குப்பொருளும், புஷ்டிசத்தும் பெரி, பெரி என்று சொல்லப்படும் கொடிய நரம்பு வியாதியைதடுக்கும் சத்தும் இருக்கிறது. பெரி பெரி வியாதி மிஷின் குத்தல் அரிசி அதிகமாக உபயோகிக்கும் வடக்கு சர்க்கார் பிரதேசங்களில் சர்வ சாதாரணமாக இருக்கிறது. அவ்விடங்களில் கைகுத்தல் அரிசி உபயோகித்தால் இந்த வியாதி குறையும். புழுங்கலரிசையையும்விட கைகுத்தல்தான் விசேஷமானது. கைகுத்தலால் இரண்டு அனுகூலங்களுண்டு. அதனால் அதிக புஷ்டி சத்துள்ள தான்யம் கிடைக்கிறது. மேலும் 6 சதவிகிதம் அதிக அரிசி நமக்குகிடைக்கிறது. இந்த மாகாணத்தில் எல்லா மிஷின் குத்தலரிசிக்குப் பதில் கைகுத்தினால், 2 லக்ஷம் டன் அதிகப்படி அரிசி கிடைக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோல் மட்டமாக தீட்டப்பட்ட மிஷின் குத்தல் அரிசியும் கொஞ்சம் நன்மை தருகிறது.

ஆனால் கைகுத்தல் அரிசி உபயோகிப்பதால் மாத்திரம், அரிசி ஆகாரத்தில் எல்லா புஷ்டிசத்துகளும் கிடைப்பதாக சொல்லமுடியாது. சோளம், கம்பு, கேவரு, முதலிய தான்யங்களை அரிசி ஆகாரத்துடன் உட்கொண்டால் புஷ்டி சத்து சேருகிறது.

அவைகளை அதிகமாக உற்பத்திசெய்து, அரிசிக்குப் பதில் உபயோகித்தாலும் நல்லதே. 5 அவுன்ஸ் அரிசிக்குப் பதில் 5 அவுன்ஸ் மேற்சொன்ன தான்யம் அதிக புஷ்டி சத்தை தருகிறது. வட சர்க்காரில் இந்தபடி உபயோகித்தால் பொதுவாக தேகாரோக்கியம் விருத்தியடைந்து, பெரி, பெரி போன்ற வியாதிகள் குறைந்தன. மேற்சொன்ன தான்யங்களில் அரிசியைக்காட்டிலும் விடமீன் B, என்ற ஊக்குப் பொருள் அதிகம். ஆகையால் அந்த தான்யங்களை நாம் அதிகம் உட்கொள்ளுவது உசிதம்.

# செய்தித் திரட்டு.

## ஆகார தான்யங்களின் விலை கட்டுபாடு.

இங்கிலாந்தில் இருக்கும் தேச போர் விவசாய கமிடிகள்போல் நம் தேசத்திலும், கிராம, தாசீல், ஜில்லா, மாகாண கமிடிகளை ஏற்படுத்தி, குடியானவர்களின் பூரண ஒத்துழைப்பைப் பெறவேண்டும் என்று டில்லி ஆகார ஆலோசனை கவுன்சில் சிபார்சு செய்திருக்கிறது.

பர்மாவிலிருந்து வரும் அரிசி சண்டை காரணமாக நின்று போனதால் தேசத்தில் ஏற்படவிருக்கும் அரிசியின் குறைவை சமாளிக்க, கவுன்சில் மாகாண கவர்மெண்டுகளை ஜனங்களை அரிசியை மட்டாகவும் மற்ற தான்யங்களை அதிகமாகவும் உபயோகிக்கும்படி தூண்ட வேண்டும் என சிபார்சு செய்ய தீர்மானித்திருக்கிறது.

போக்குவரத்து சாதனங்களில் நெருக்கடியை சமாளிக்க ஷை கவுன்சில், மாட்டு வண்டிகள், போட்டுகள் இவைகளுடைய உதவியை உள்நாட்டு போக்குவரத்திற்கு அதிகமாக பெற முயற்சி செய்யவும், நீண்ட தூரம் செல்லவேண்டிய சாமான்களை தொடர்ச்சியாக அங்கங்கே மாட்டு வண்டிகளை எடுத்துப்போக ஏற்பாடு செய்யும்படிக்கும் மாகாண கவர்மெண்டுகளை வற்புறுத்தியிருக்கிறது.

*  *  *

## வெர்ஜீனியா புகையிலை விதை.

வெர்ஜீனியா புகையிலை விதை அதன் காம்புடன், பயிரை எடுத்தபின், அடுப்பு நெருப்புக்காக உபயோகப்படுத்தப் படுகிறது. இதனால் மிகவும் நஷ்டம் ஏற்படுகிறது. குண்டூர் ஜில்லா ப்ராடிபெட் விவசாய இலாகா இது விஷயமாக ஆராய்ச்சி செய்து, மேற்சொன்ன வெர்ஜீனியா புகையிலை விதையை இப்போது போல் நெருப்புக்கு உபயோகப்படுத்துவதைவிட, கால்நடைகளுக்கு உணவாக உபயோகித்தால் ரொம்ப லாபகரமானது என்று தெரிவிக்கிறார்கள். மேலும் அந்த விதைகளை கழுவி, சுத்தம் செய்து செக்கில் ஆட்டினால், நல்லெண்ணெயைப் போல், எண்ணெ கிடைக்கிறதென்றும், அதை சமையலுக்கும், விளக்கேற்றவும் உபயோகப்படுத்தலாம் என்றும், அதன் புண்ணாக்கு கால்நடைக்கு உணவாகுமென்றும் சொல்லுகிறார்கள். அந்த தீனியால் பிராணிகளுக்கு ஒரு கெடுதலும் ஏற்படவில்லை என்று நிரூபித்திருக்கிறார்கள். குண்டூர் தாலூகாவில் அநேக இடங்களில் அநேக குடியானவர்கள் அதை பிராணிகளுக்கு உணவாக உபயோகித்திருக்கிறார்கள். அதனால் பசு அதிகம் பாலும் வெண்ணெயும் கொடுப்பதாகவும் சொல்லுகிறார்கள். உலர்ந்த விதையை மாவாக அரைத்தும், விதையை 2, 3 நாள் ஜலத்தில் ஊரவைத்து, அரைத்தும், அல்லது உரலில் போட்டு இடித்தும் தவுடு, பொட்டு இவைகளுடன் கலந்து ஒரு வாரம் கொடுக்கலாம். பிறகு தனிப்பட்டே கொடுக்கலாம். பிராணிகளும் இதை ருசித்து உட்கொள்ளுகின்றன. இது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. ஆடுகள் இந்த தழைகளை தின்று அதனால் பயனடைகின்றன. ஏன் சில பலஹீனமான பிராணிகள் இந்த தீனி தின்ன ஆரம்பித்த பிறகு மாத்துக்கூட போயிருக்கின்றன. அதனால் இதை தின்னால் பிராணிகளுக்கு அபாயம் உண்டாகும் என்று சொல்லுவது அறியாத் தன்மை. சாதாரண நல்ல பயிர் விளைந்தால் அது ஒரு ஏகராவுக்கு 1½ மூட்டை கிடைக்கும். விதையை எடுப்பதற்கு அதிக

செலவு இல்லை. வருஷந்தோறும் சுமார் 1 லக்ஷம் ஏகராவில் வர்ஜீனியா புகையிலை பயிராகிறது. எல்லா விதையையும் சேகரித்தால் ஒரு லக்ஷம் மூட்டை விதைகிடைக்கும். தவுடு, பொட்டு இவைகளை மாட்டுத்தீனிக்காக வாங்குவதற்கு பதில் இதை உபயோகித்தால் செலவு செய்யும் பணம் ரொம்பவும் மிச்சப்படும். மேலும் தீனிக்காக பயிராக்கும் நிலங்களில், கம்பு, சொர்ரா, சோளம், இவைகளை பயிர் செய்யலாம். நெல் பஞ்சம் ஏற்பட்டால், இதனால் அதிக பயன் ஏற்படுமல்லவா.

*　　　*　　　*

பொன் அரளி—பூச்சிகளைக்கொல்ல ஏற்றது.

பூச்சி வகைகளை கற்றறிந்தவர்கள், இது வரை கிடைத்து வந்த பூச்சிசம்ஹாரிணிகள் கிடைப்பது கஷ்டமாகி விட்டதால், இது விஷயமாக ஆராய்ச்சி செய்து, பூச்சிகொல்லும் சக்தி பொன் அரளி புஷ்பத்தில் இருப்பதாக கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இது ஆதியில் தென் அமெரிக்காவிலும் மேற்கு இந்தீஸ் தீவுகளிலும் உண்டாகி அநேக வருஷங்களுக்கு முன் நம் தேசத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். இது தென் இந்தியாவில் நன்றாக விளைகிறது. அநேகமாக வேலியோரங்களில் இதை பயிர்செய்கிறார்கள். அதன் விதைக்குள் இருக்கும் பருப்பில் விஷம் இருக்கிறது.

இப்போதுதான் இந்த விதைக்குள்ளிருக்கும் பருப்புக்கு பூச்சிகளைக் கொல்லும் சக்தியிருப்பதாகவும், கெடுதல் செய்யும் பூச்சிகளை கொல்ல இவைகளை உபயோகிக்கலாம் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஜலத்தில் 24-மணி ஊற வைத்து, அரைத்த பருப்புகளின் ரசம் மிகவும் விஷமுடையதாகவும், பூச்சிகளின் மேல் தெளித்தால் உடனே கொல்லக்கூடியதாக இருப்பதாகவும் தெரிகிறது. கூட சோப்பையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். அந்த விஷசத்தை பலவித அளவில் கலந்ததாக உண்டாக்கலாம். சிறிய பூச்சிகளுக்கு ஒரு காலன் ஜலத்தில் ¼-அவுன்ஸ் விஷரசம் போதும். இன்னும் கொஞ்சம் பெரிய பூச்சிகளுக்கு ½-அவுன்ஸ் தேவை. வெட்டுக்கிளி, எட்டுக்கால் பூச்சிபோன்றவைகளுக்கு ஒரு அவுன்ஸ் வேண்டும். எப்போதாவது இரண்டாவது தரம் தெளிக்கவேண்டிவரலாம்.

இலைகளுக்காவது, புஷ்பங்களுக்காவது ஒரு காலன் ஜலத்திற்கு 1 அவுன்ஸூம் அதற்கு குறைவாகவும் விஷ ரசத்தை உபயோகிப்பதால் ஒரு கெடுதலும் ஏற்படுவதில்லை. இதை உபயோகித்த கொஞ்சம் காலம் வரையில் செடிகளை பூச்சிகள் அண்டுவதில்லை. இது வயிற்றில் என்ன மாறுதல் உண்டுபண்ணும் என்பது இன்னும் சரிவர தெரிந்துகொள்ளப்படவில்லை. ஆகையால் ஆகாரத்திற்கு உண்டாகும் செடிகளின்மேல் அவை தின்னப் பக்குவமடையும் ஒரு மாதத்திற்கு முன்னமேயே இவைகளை தெளிக்காமலிருக்கவும்.

---

## சென்னை மதுவிலக்குச் சட்டத் திருத்தம்.

1937 ஹுத்திய சென்னை மது விலக்குச் சட்டத்தை திருத்த ஒரு மசோதா சர்கார் பிரசுரித்திருக்கிறார்கள்.

கள்ளத்தனமாக [illegible] காய்ச்சுவதும், விநியோகிப்பதும் அதிகமாக பரவி வருவதால் [illegible] தகுக தற்போது இருக்கும் 6 மாத தண்டனை, 1,000 ரூபாய் அபராதம் [illegible] தை இனி அக்குற்றத்திற்கு 2 வருஷம் தண்டனையும், 5,000 ரூபாய் அபராதமுமாக அதிகப்படுத்தப் போவதாக, காரணமாக தெரிவித்திருக்கிறார்கள்.

# மதராஸ் ப்ராவின்ஷியல் கோஆபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

---

தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

இப்ராஹீம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடெண்டு :

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதராஸ் கார்பரேஷனுக்கும், மதராஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காராக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

ஸெக்ரடெரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

---

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. விய்யன்னா, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.
மதராஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோஆபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.